ஓய்வு பெறும் வயதாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் துறையைப் பொறுத்தவரைக்கும் இவர் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் பதவிப் பொறுப்பை வகிக்கிற அளவுக்கு இருக்கின்ற தன்மை உடையவர். 58 வயது வரைக்கும் இருப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும்.

சோதனைச் சாவடிகள்.

*151 வினா.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) நமது மாநிலத்தில் உள்ள உணவு தானிய சோதனைச் சாவடிகளை அகற்ற அல்லது மாறுதல் செய்ய உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) ஒரு மாவட்டத்திற்கென நிச்சயிக்கப்பட்டுள்ள கொள்முதல் இலக்கு முழுவதையும் எய்தியபிறகு அல்லது அதில் கணிசமான சதவீத அளவினை எய்தியபிறகு, அம் மாவட்டத்திற்குள் நெல் எடுத்துச் செல்வதற்கு உள்ள கட்டுப்பாடுகளை நீக்கிவிட வேண்டுமென்பதே அரசின் கொள்கையாகும். இதன் விளைவாக இந்த மாவட்டத்திற்குள் நிறுவப் பட்டுள்ள காவல் சாவடிகள் எடுத்துவிடப்படும். மேலும், ஒரு மாவட்டத்தி லிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்குள்ள கட்டுப் பாடுகள் தேவையானபோது ஓரளவுக்கு நீக்கிவிடலாமாயெனவும் அரசு ஆலோசித்து வருகிறது. அப்படிச் செய்தால் அதன் விளைவாக சில மாவட்டங்களில் தேவையற்றவையெனத் தெரியவரும் சில காவல் சாவடி கள் நீக்கப்படும்.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : சோதனைச் சாவடிகளை நீக்குவதுபற்றி அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு மிக விரிவாகப் பேசியிருக்கிற காரணத்தினால், மேலும் துணைக் கேள்விகள் வேண்டாம் என்று கருதுகிறேன்.

Thiru K. VINAYAKAM : Check-posts have not been . . .

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : இரண்டு நாட்களுக்கு முன்பு சோதனைச் சாவடிகள் எல்லா மாவட்டங்களிலும் நீக்கப்பட்டு விட்டன, வட ஆற்காடு மாவட்டத்தில் மட்டும் நீக்கப்படவில்லை என்ற நிலையைப் பற்றி அமைச்சர் அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். இப்பொழுது நேரம் இல்லை.

Thiru K. VINAYAKAM : I challenge the statement of the Minister that the check-posts in the Chingleput district have been abolished. Still they are there.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : நான் உட்கார்ந்த பிற்பாடு பேசவேண்டும் என்ற முறையைப் பின்பற்றுவதற்கு திரு. விநயகம் அவர்கள் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

Thiru K. VINAYAKAM : I do not think that I should learn anything fresh.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : எந்த விதமான பேச்சும் உட்கார்ந்து கொண்டே பேசவேண்டாம்.

திரு. கே. விநயகம் : உட்கார்ந்து பேசக்கூடாது என்று சொல் கிறீர்கள், நின்றுகொண்டும் பேசக்கூடாது என்று சொல்கிறீர்கள். நான் என்னுடைய அபிப்பிராயத்தை எப்படிச் சொல்வது ?

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : நான் எப்பொழுதும் நின்று கொண்டே இருப்பேன் என்று திரு. விநயகம் அவர்கள் நினைப்பது முடியாத காரியம். நான் உட்கார்ந்திருக்கக்கூடிய நேரம் இருக்கிறது. அப்பொழுது அவர்கள் எழுந்து பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த முறையை பின்பற்றுவதற்கு அவர்கள் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். கேள்வி நேரம் ஒரு மணி நேரம் ஆகிவிட்டது. இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள். மேலும் இந்தச் சபையினுடைய காலத்தை நான் வீணக்க விரும்பவில்லை. அடுத்த கேள்விக்குப் போகிறேன்.

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir. With due respect to the Chair, when there is a discrepancy between the answer given by the Hon. Minister to-day and the answer given three days back, is it not the duty or the privilege of a Member to contradict it and elicit further information on this issue ? Please let me have your ruling.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் நேற்று கூறியதற்கும், இன்று கூறியதற்கும் முரண்பாடு இருக்குமானல், அதைப் பற்றி கேட்பதற்கு அங்கத்தினர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனல், அமைச்சர் அவர்கள் இதுபற்றி தெளிவு பெறவேண்டிய அளவுக்குக் குறிப்பிட்டிருக்கிற காரணத்தினல், மேலும் இதுபற்றி விளக்கம் கோருவதற்கு நான் இடம் அளிக்கவில்லை என்றுதான் கூறுகிறேன்.

வட்டார மருத்துவ மனை

*152 **விஞ.—திரு. பெ. மலேச்சாமி :** மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :—

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிப்பு எல்லைக்குள் வட்டார மருத்துவ மனையைப் போல (Taluk Headquarters Hospital) மருத்துவ மனைகள் அமைக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தற்போது இல்லை.

திரு. பெ. மலேச்சாமி : இனிமேலாவது இந்தத் திட்டத்தை அமுல் படுத்துவதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நிதி நிலைமை சீர்பட்ட பிறகு இதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன் : இம்மாதிரியான ஒரு ஆஸ்பத்திரி துவக்குவதற்காக 1961-ல் நங்கவல்லி பஞ்சாயத்து யூனியன் முயற்சி செய்தார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அதுபற்றி தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. நா. சௌந்திரபாண்டியன் : தாலுகா தலைநகர மருத்துவ மனைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்வதுபோல், உப தாலுகா தலைநகர் மருத்துவ மனைகளையும் அரசாங்கம் உடனடியாக எடுத்துக்கொண்டு அவைகளை அரசாங்க ஆஸ்பத்திரிகளாக ஆக்குவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே குறிப்பிட்டதுபோல அரசாங்கத்தின் நிதி நிலைமை சீர்பட்ட பிறகு அதுபற்றி பரிசீலிக்கப்படும்.